12.03.2025 **OS.No. 187/2014**
**பி.வா.சா. 2 பெயர்: கிருஷ்ணமூர்த்தி** த/**பெ. சின்னாகவுண்டர்**
**சாட்சி ஆஜர்.** சத்திய பிரமா**ணம் செய்யப்பட்டார்.**
**1-**ம் பிரதிவாதி தரப்பு **குறுக்கு விசாரணை:**

1. வழக்கின் 2-ம் பிரதிவாதி மணிமேகலை எனக்கு மாமியார் என்றால் சரிதான். மணிமேகலைக்கு மூன்று மகள்கள் என்றால் சரிதான். மூத்த மகள் மாலதி மருத்துவராக உள்ளார் என்றால் சரிதான். 2வது மகள் அம்சா என்பவர் ஆசிரியையாக உள்ளார் என்றால் சரிதான். 3வது மகள் எழிலரசி எனது மனைவி என்றால் சரிதான். எனது மாமனார் K.P. முருகேசன் ராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டார் என்றால் சரிதான். எப்போது பணி செய்தார், ஓய்வு பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மாமனார் இறந்து விட்டார் என்றால் சரிதான். எனது மாமனாருக்கு 3 பெண்வாரிசுகள் தவிர ஆண் வாரிசுகள் கிடையாது என்றால் சரிதான். எனது மாமியார் எங்கு குடியிருக்கிறார் என்றால் கீழ்குப்பத்தில் குடியிருக்கிறார். கீழ்குப்பத்திற்கும் நான் குடியிருக்கும் வாடமங்கலம் ஊருக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 5 K.M தூரம் இருக்கும். எனது மாமியாருக்கும், மாமனாருக்கும் தாவா புல.எண் 77/2A என்ற சொத்து தவிர வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு திருமணம் எப்போது நடந்தது என்றால் 05.02.2003 ஆகும்.

2. எனது மாமியாருடன் உடன் பிறந்த சகோதரிகள் எத்தனை பேர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மாமியார் குடியிருக்கும் வீடு அவரது வீடா, அவரது கணவர் வீடா அல்லது அவரது தந்தை வீடா என்று எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது திருமணத்திற்கு முன்னர் எனது மாமியார் எந்த வீட்டில் குடியிருந்தார் என்றால் தற்போது குடியிருக்கும் கீழ்குப்பம் வீட்டில்தான் மாமனாருடன் வசித்து வந்தார். எனது மாமியாருடன் உடன் பிறந்த ஒரே சகோதரர் 1-ம் பிரதிவாதி சிவக்குமார் என்றால் அது பற்றி கேள்விபட்டிருக்கிறேன். முருககவுண்டர் எனது மாமியாரின் தந்தை என்றால் சரிதான். எனது மாமியார் முருககவுண்டர் வீட்டில் வாரிசாக வசித்து வந்தாரா என்றால் அது பற்றி தெரியாது எனக்கு திருமணமானபோது தனியாக தான் வசித்து வந்தார்.

3. எனது மாமியார் எழுதிக்கொடுத்த சொத்துக்கு மூலப்பத்திரம் உள்ளதா என்றால் எனது மாமியாருக்கு சீதனபத்திரம் எழுதிகொடுக்கபட்டுள்ளது. அந்த பத்திரம் என்னிடம் உள்ளது. சொத்து மொத்த வீஸ்தீரணம் 3 ஏக்கர் 52 செண்டு என்றால் சரிதான். 09.10.2003 ல் எனக்கு 2 ஏக்கர் எழுதிகொடுத்துள்ளார் என்றால் கிரையபத்திரமாக எழுதிகொடுத்துள்ளார். 16.01.2011 ல் எனக்கு 1 ஏக்கர் 52செண்டு எனது மாமியார் எழுதிகொடுத்துள்ளார் என்றால் கிரையபத்திரமாக எழுதி கொடுத்துள்ளார். மூலப்பத்திரம் எந்த தேதியில் ஏற்பட்டது என்றால் 1973ம் வருடத்தில் எனது மாமியார் அவரது தந்தையிடம் இருந்து சீதனமாக சொத்தினை பெற்றுள்ளார். எனது கிரையத்திற்கு முன்பாக எனது மாமியார் 2-ம் பிரதிவாதி மணிமேகலை சொத்தினை அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். ஆரம்பத்தில் சொத்துக்கான பட்டா, சிட்டா, அடங்கல் ஆவணங்கள் எனது மாமியார் பெயரில் இருந்தது என்றால் சரிதான். தற்போது வாதிகள் தாவா புல.எண் 77/2A என்ற சொத்தில் பாகம் கேட்டு பிறசொத்துக்களுடன் சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான். எனது புல.எண் 77/2A என்ற சொத்தானது எனது மாமியாருக்கு சீதனம் பத்திரம் மூலமாக கிடைத்த சொத்து என்று எனது எதிர் வழக்குரை மற்றும் நிறுபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது மாமியார் அவரது தந்தை வீட்டில் கணவருடன் குடியிருந்து வந்தார் என்றால் அது பற்றி கேள்விபட்டுள்ளேன்.

4. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு படித்துள்ளேன். எனது நிருபண வாக்குமூலத்தில் எனது மாமனார் முருகேசன் அவரது மாமனார் முருககவுண்டர் வீட்டில் வசித்து வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விவரம் கேள்விபட்டுதான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மணிமேகலை தந்தை எந்த வருடம் இறந்தார் என்றால் சுமார் 1993-1994 வருடத்தில் இறந்துள்ளார். எனது நிருபண வாக்குமூலத்தில் மணிமேகலை தந்தை 1994 இறந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கேள்விபட்ட விவரத்தை தான் சொன்னேன். எனது மாமனார் முருகேசன் அவரது மாமனார் முருககவுண்டரிடம் இருந்து சொத்துக்கள் கிரையம் பெற்றுள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. எனது மாமியாருக்கு ஆண் வாரிசு இல்லை என்றும், 3 பெண்களில் 2 பெண்கள் வெளியூரில் வசித்து வருகிறார் என்றும் அதனால் நானும் எனது மனைவியும் எனது மாமியாருக்கு ஆதரவாக இருந்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் வாடமங்கலத்தில் குடியிருந்து வருகிறோம்.

5. வாதிகள் மற்றும் 1,2 பிரதிவாதிகள் தான் முருககவுண்டர் வாரிசுகள் என்றால் அது பற்றி கேள்விபட்டுள்ளேன். வாதிகள் முருககவுண்டர் வாரிசுகள் என்பதாக பாகம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் ஆரம்பத்தில் புல.எண் 77/2A என்ற சொத்தானது சேர்க்கபடவில்லை என்றும் பின்னிட்டு மேற்படி புல.எண் 77/2A என்ற சொத்தானது வழக்கில் சேர்க்கபட்டது என்று சொன்னால் சரிதான். எனது எதிர் வழக்குரையில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் இடையே பாக பாத்தியம் ஏற்படவில்லை என்று சொல்லியுள்ளது பொய்யான என்றும், சொத்துக்களில் பாகம் கோரியுள்ளது பொய்யானது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிர் வழக்குரையில் முருககவுண்டர் சிவக்குமாருக்கு பாகம் கொடுத்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது மாமியாருக்கு எப்போது திருமணமானது என்றால் 1968 ம் வருடம் ஆகும். எனது மாமியாருக்கு 1968 ல் திருமணமாகி 1974 லில் சீதனபத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்து முருககவுண்டர் கிரையம் பெற்ற சொத்தா அல்லது பரம்பரை சொத்தா என்றால் அது பற்றி தெரியாது. இவ்வழக்கின் வாதியான பழனியம்மாளை எனது தரப்பில் விசாரணை செய்யவுள்ளேனா என்றால் விசாரணை செய்ய உள்ளேன். பழனியம்மாள் எனது சின்னமாமியார் என்றால் சரிதான். வாதி பழனியம்மாள் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார் என்றால் சரிதான். பழனியம்மாளை ஏற்கனவே விசாரணை செய்தபோது நான் உடன் இருந்தேன் என்றால் சரியல்ல. நான் அப்போது நீதிமன்றம் வரவில்லை. பழனியம்மாளை விசாரணை செய்த போது நான் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்ததாக பழனியம்மாள் சொல்லி உள்ளார் என்றால் சரியல்ல. எனது மாமியாரின் அக்கா 1-ம் வாதி கோவிந்தம்மாள் என்றால் சரிதான். கோவிந்தம்மாள், பழனியம்மாள் மற்றும் இதர முருககவுண்டர் வாரிசுகளுக்கு சொத்துக்களை முருககவுண்டர் சீதனமாக கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. எனது மாமியாரின் தந்தை முருககவுண்டர் இறந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் எவ்வாறு இறந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மாமியார் சொல்லிதான் அவரது இறப்பு பற்றி கேள்விபட்டேன். சிவக்குமார் திருமணம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஓம்/- திரு. முஹம்மது அலி, பி.எஸ்.சி. பி.எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.